# 17 ஒழுக்கம் உயர்வளிக்கும்

அதிபர் அவர்களுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் அன்பான மாணவர்களுக்கும் காலை வணக்கம். நான் உங்கள் முன் ஒழுக்கம் உயர்வளிக்கும் என்ற தலைப்பில் உரையாற்றப் போகின்றேன்.

மாணவர்களாகிய நாங்கள் நல்லொழுக்கங்களை பின்பற்றிச் சிறந்து விளங்க வேண்டும். இன்றேல் எங்களுக்குப் பெருமையிராது.

'ஒழுக்கம் விழுப்பந் தரும்' என்பது வள்ளுவர் வாக்கு. மரம் கனி தரும், மாடு பால் தரும் என்பது போல ஒழுக்கம் விழுப்பந் தரும் என்று குறள் கூறுகின்றது. விழுப்பம் என்பது சிறப்பு, இதனால் நாம் சிறப்படைய வேண்டுமானால் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்பது புலப்படும்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை என்பது வள்ளுவர் கருத்து. இது படிப்பால், பட்டத்தால், பதவியால், பணத்தால் ஒருவன் மேன்மை அடைய முடியாது. ஒழுக்கம் ஒன்றினால் தான் மேன்மையடைய முடியும் என்பதை வலியுறுத்துகின்றது. ஆம். ஒழுக்கத்தை இழந்தவர்கள் எவ்வளவு படித்தாலும், எத்தகைய பட்டம் பெற்றாலும், எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், எவ்வளவு பணம் பெற்றிருந்தாலும் என்ன பயன்?

உயிரைக் காப்பாற்றுவதில் நாம் அனைவரும் அதிக கவலை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதைவிட ஒழுக்கத்தைக் காப் பாற்றுவதில் அதிகமாகக் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து, இதை அவர்,

‘ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்’ என்று அரைக் குறளால் கூறுகிறார்.

ஒழுக்கத்தை இழந்தவர்கள் எவராலும் மதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் இகழப்படுவார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் அடைய வேண்டாத பழியையும் அடைய வேண்டி நேரிட்டுவிடும் என்று வள்ளுவர் எச்சரிக்கை செய்கின்றார். இழுக்கத் தின் எய்துவர்பழி என்று கூறவில்லை. ‘இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி’ என்பதே அவர் வாக்கு. இதனால் ஒழுக்கம் தவறியவன் தான் செய்யாது, பிறர் செய்த பழியையும் ஏற்க வேண்டிவரும் எனத் தெரிய வருகிறது.

பைபிளில் பத்துக் கட்டளைகள் இருப்பது போல திருக்குறளில் பத்துக் கட்டளைகள் இருக்கின்றன. இவை பத்தும் ஒழுக்கத்தை பெறத் துணை செய்வன. அவை

பொய்யைச் சொல்லாதே, புலாலை உண்ணாதே
கள்ளைக் குடியாதே, களவை நினையாதே
காமம் கொள்ளாதே, கொலையைச் செய்யாதே
சூதை விரும்பாதே, சிற்றினம் சேராதே
புறங் கூறாதே, பொறாமை யடையாதே

இவை பத்தையும் வெவ்வேறு சொற்களால் கூறியிருப்பது எண்ணி எண்ணி வியக்கக்கூடிய ஒன்று. மாணவர்களாகிய நாங்கள் இவற்றைப் பின்பற்றி நடந்தால் மக்கட் சமூகத்தில் நாங்கள் உயர்ந்து காணப்படுவோம். ஆகவே ஒழுக்கம் உயர்வளிக்கும் என்பதைக் கேட்டு மனத்தில் வைத்து நடந்தீர்களானால் நீங்களும் உயர்வடைவீர்கள் என நம்புகிறேன். என உரையை அமைதியாகக் கேட்ட அனைவருக்கும் அன்பின் பணிவு. நன்றி வணக்கம்.

### கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. மனிதன் மேன்மையை எவ்வாறு பெறுகின்றான்?
2. மரம் கனி தருவதைப் போல் ஒழுக்கம் எதனைத் தரும்?
3. மனிதன் எவற்றால் மேன்மை அடைய முடியாது?
4. ஒழுக்கம் பற்றி கூறப்பட்டுள்ள திருக்குறள்கள் இரண்டு தருக.
5. இகழ்ச்சிக்கு ஆளானோர் யார்?

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. இதுபோன்ற வேறு சொற்பொழிவுகளைச் சேகரிக்குக.
2. திருக்குறளில் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தை எழுதுக.
3. உமது பாடசாலையில் நடைமுறைப் படுத்தப்படும் சட்டதிட்டங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
4. குறித்த சொற்பொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள நற் பண்புகளைக் குறிப்பிடுக.
5. திருக்குறளில் பத்துக் கட்டளைகள் எனக் கூறப்பட்டுள்ள விடயங்களை பட்டியற்படுத்துக.

### செயற்பாடு

1. ஒழுக்கம் தொடர்பாக வள்ளுவர் கூறிய ஏனைய குறட் பாக்களைத் தேடி எழுதுக.
2. மாதிரிச் சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்துவதற்கு வழிகாட்டுக.